# பிரத்யேக மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டுத் தீர்ப்பாயம், திருப்பூர்.

2025ம் ஆண்டு அக்டோபர் மாதம் 09ம் நாள் வியாழக்கிழமை எ.ம.சா.1 என்பவரின் சாட்சியம் உரிமையியல் நடைமுறைச் சட்டம், ஆணை 18 விதி 4(2)–ன் படி தலைமை அதிகாரி அவர்கள் முன்னிலையில் 1969–ம் ஆண்டின் 44–வது சட்டப்படி பிரமாணத்தின் பேரில் பதிவு செய்யப்படுகிறது.

## MCOP No.984/2023

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரிசங்கு | வயது | |
| தந்தை/கணவர் பெயர் | | தொழில் | |
| கிராமம் | | | |
| தாலுக்கா | | | |

---

**<u>3ம் எதிர்மனுதாரர் தரப்பு முதல் விசாரணை</u>**

நான் 3ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் உதவி மேலாளராக பணிபுரிகிறேன். எனது சாட்சியத்தை சத்திய பிரமாண நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். எனது தரப்பு சான்றாவணங்களை தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் ஆவணப்பட்டியலில் குறிப்பிட்டுள்ள ஆவணம் **எ.ம.சா.ஆ.1** ஆகும்.

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எங்கள் நிறுவனம் பொறுத்து இந்த மனுதாரர் மூன்றாம் தரப்பினர் என்றால் சரிதான். எங்கள் காப்பீடு நிறுவனம் 3ம் தரப்பினருக்கான பாலிசி தொகையை வசூல் செய்துள்ளது. காப்பீடு விதிமீறல் எதுவும் இருப்பின், உரிய இழப்பீடு தொகையை மனுதாரருக்கு வழங்கிவிட்டு, பின்னர் வாகனம் உரிமையாளரிடமிருந்து

வசூலித்துக்கொள்ளலாம் என்று சொன்னால் சரியல்ல. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளவாறு இந்த அசல் மனுவானது காலதாமதத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொல்லியிருப்பது சரியல்ல என்றாலும், 03.01.2023 அன்றே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதால், உரிய காலவரையறைக்குள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னாலும் சரியல்ல. இந்த மனுதாரருக்கு எங்கள் நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி கூறியதைசாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு பின்னர் அது கையெழுத்து பெறப்பட்டது.

SUNDARAM Digitally signed by SUNDARAM Date: 2025.10.09 14:46:00 +0530

பிரத்யேக மோட்டார் வாகன விபத்து
இழப்பீட்டுத் தீர்ப்பாய நீதிபதி/மாவட்ட நீதிபதி,
பிரத்யேக மோட்டார் வாகன விபத்து
இழப்பீட்டுத் தீர்ப்பாயம்,
திருப்பூர்.